**செ.வெ.எண்: 636** **நாள்: 14.10.2024**

# புதுக்கோட்டை மாவட்டம்
## பத்திரிகைச் செய்தி

---

அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கான விருது வழங்குதல் (மாநில அளவில்). அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2023–24–ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறந்த விவசாயிகளை தேர்வு செய்து முதல் பரிசு ரூ.1,00,000/– இரண்டாம் பரிசு ரூ.60,000/– மூன்றாம் பரிசு ரூ.40,000/– வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் தகுதி மற்றும் முறை**, அங்கக வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கான விருதிற்கு,

- தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- சொந்த நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்ப படிவம், துறை இணையத்தளம் www.tnhorticulture.tn.gov.in மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களில் கிடைக்கும்.
- விவசாயிகள் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வட்டார தோட்டக்கலை அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்து மாவட்ட அளவிலான குழு ஒப்புதலுடன், மாவட்டத்திற்கு ஒரு விண்ணப்பம் தேர்வு செய்யப்பட்டு தோட்டக்கலை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மாநில அளவிலான குழு உறுப்பினர்கள் பரிசீலனை செய்து பரிசு வழங்க தேர்ந்தெடுக்கப்படுவர்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai